1982 ஏப்ரல் 3]

டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவரவர்களே, மாண்புமிகு அமைச்சரவர்கள் அளித்த பதிலில் கேரளத்தில் ஒரு தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் அரசு இல்லாத சூழ்நிலையில் இப்பொழுது இந்த மாநாட்டில் கலந்து கொள்வது அவ்வளவு நல்லதல்ல என்ற கருத்தை அறிவித்தார்கள். அப்படியானால் அடுத்த காவேரி பிரச்னை பற்றிய கூட்டம் கேரளத்திலே அரசு உருவாகி-மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசு உருவாகிற வரையிலே காத்திருக்கப் போகிறதா என்பதை நான் தெரிந்து கொள்ள விரும்புகிறேன்.

இங்கே ஓட்டெடுப்பு திடீரென்று வந்து விடுகிற காரணத்தால் என்று சொன்னார்கள். முதலமைச்சரவர்களே கொண்டு வந்த ஒரு சட்ட முன்வடிவிற்கு ஓட்டெடுப்பு வந்தபொழுது முதலமைச்சரவர்களே இந்த அவையிலே முந்தாநாள் இல்லை என்று நான் மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சரவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

கர்நாடகத்திலேயும் இங்கும் சட்டசபை நடப்பதாகச் சொன்னார்கள். ஆனால் பத்திரிகையில் கர்நாடக முதலமைச்சர் டெல்லியிலேதான் இதற்காகக் காத்துக் கொண்டிருக்கிறார்கள் என்று செய்தி வந்திருக்கிறது.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவரவர்களே. மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள், மற்ற அமைச்சர்கள் ஏன் போகக் கூடாது என்றும் கேட்டார்கள். ஆகவே வாக்கெடுப்பு என்றால் முதலமைச்சர் மட்டுமல்ல, மற்ற அமைச்சர்களும் இங்கே இருக்க வேண்டியிருக்கிறது என்பதை எதிர்க்கட்சித் தலைவரவர்கள் உணர்ந்து கொள்வார்கள் என்று கருதுகிறேன்.

ஆளுநர் ஆட்சி கேரளத்திலே இருக்கிறது என்பதை நான் குறிப்பிட்டதற்குக் காரணம் 1976 ஆம் ஆண்டு தமிழகத்திலே ஆளுநர் ஆட்சி இருக்கும் பொழுது மத்திய அரசு ஒருவகையான உடன்பாட்டைக் கொண்டுவந்ததாகத் தெரிவித்த கருத்தை நாம் மறுக்கின்ற அடிப்படையே மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட ஒரு அரசு இல்லாதபொழுது ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தத்தை நாம் ஏற்றுக்கொள்ள முடியாது என்று நாம் எதை வைத்துக் கூறுகிறோமோ அதே காரணம் நமக்குத் திருப்பிக்கூடச் சொல்லப்படும். அந்த அடிப்படையிலே இதை நாம் கவனிக்க வேண்டி இருக்கிறது என்ற வகையில் குறிப்பிட்டேன்.

(ஆ) காங்கிரஸ் கட்சியின் உபதலைவர்

திரு. ரா. உமாநாத்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவ களே, இந்த அவை சம்பந்தப்பட்ட பிரச்சினை. அதிலே உங்களுடைய கைட்லைன்ஸ் தேவை. மாண்புமிகு உறுப்பினர் சித்தன் அவர்கள் காங்கிரஸ் கட்சியின் உபதலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறார். ஆனால் வந்து இங்கே முன்வரிசையில்

உட்காரமாட்டேன் என்கிறார். துணைத் தலைவர் சுந்தரராஜ் அவர்கள் அங்கேயே உட்கார்ந்து இருக்கிறார், இங்கே வந்து உட்காரமாட்டேன் என்கிறார். ஒருவேளை நீங்கள்தான் தடுக்கிறீர்களோ என்று தெரியவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நான் யாரையும் தடுக்கிற மாதிரி இல்லை. எல்லோரையும் முன்னுக்குக் கொண்டு வந்துவிடலாம். ஆனால் முன்னாலே இடம் இல்லை. இப்போது தான் திரு. ஹாஜாசெரிப் அவர்கள் கடிதம் கொடுத்திருக்கிறார்கள். இனிமேல்தான் அதற்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டும். இது அவர்கள் கட்சியின் பிரச்சினை.

திரு. என். எஸ். வி. சித்தன்: மாண்புமிக்க பேரவைத் தலைவர் அவர்களே. நான் முன்னுக்கு வரவேண்டும் என்பதிலே நம்முடைய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்களுக்கு இருக்கின்ற ஆர்வத்தை நான் வரவேற்கிறேன், அதற்காக நன்றி கூறுகிறேன். அவருடைய ஆசை விரைவில் நிறைவேறும்.

திரு. ரா. உமாநாத்: தலைவர் அவர்களே, நான் ஒன்றைத் தெளிவுப்படுத்த விரும்புகிறேன். எந்தக் கட்சியிலே யார் தலைவர், யார் உபதலைவர் என்பது அவர்கள் இன்டர்னல் மேட்டர், ஆனால், ஒன்ஸ் இட் இஸ் டேக்கன்–அந்த ரைட் கொஸ்டின் அவையிலே வருகிறபோது நான் கட்சி பார்க்க மாட்டேன். எந்தக் கட்சியானாலும் அவருக்குள்ள ரைட்ஸ் என்கிறபோது I am out for defending. ஒருவேளை அவரை நீங்கள் உட்கார விடமாட்டேன் என்று சொல்லி விட்டீர்களா என்பதற்காகக் கேட்டேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: நல்லவேளையாக என்மீது குற்றம் சாட்டியிருக்கிறீர்கள். அதை நான் தாங்கிக் கொள்வேன்.

(இ) உரிமைப் பிரச்சினையை எழுப்ப அனுமதி.

திரு. வேடசந்தூர் வி. பி. பாலசுப்பிரமணியன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தாங்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு அனுமதி கொடுத்துள்ளீர்கள். அந்தக் கவன ஈர்ப்புத் தீர்மானம் சம்பந்தப்பட்ட பொருள் இந்த அவையிலே ஒத்திவைப்புத் தீர்மானமாகக் கொண்டு வந்து விவாதிக்கப்பட்டது என்று பல பத்திரிகைகளில் 20–ந் தேதி செய்தி போடப்பட்டிருக்கின்றது. இது எந்த வகையிலே பொருத்தமானதாக ஆகிறது என்பதும் (குறுக்கீடு) அதேபோல **246** வது விதியின் கீழ் அவையிலே நடந்து கொண்டு இருக்கின்ற பிரச்சினை சம்பந்தமாக மாண்புமிகு பொன்னுரங்கம் அவர்கள் மீது ஒரு உரிமைப் பிரச்சினையைக் கிளப்ப விழைகிறேன்.